**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 14** |
| **Name** | : | திரு.வெங்கடேஷ் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.06.2022**

## முதல் விசாரணை :

நான் தற்போது மோப்பநாய் படை பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 31.07.2015 அன்று SS காலனி காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியான, பிளாக் எண்.7, முத்துச்செல்வி இல்லம், மலைமகள் தெரு, திருவள்ளுவர் ரோடு, நேருநகர், பைபாஸ் ரோடு, மதுரை இரவு 08.30 மணிக்கு நுண்ணறிவு பிரிவு தகவலின் பேரில் மோப்ப நாய் சேரனுடன் இரவு 09.00 மணிக்கு சம்பவ இடத்தில் ஆஜராகி மோப்பமிட்டதில் மோப்பநாய் சேரன் மோப்பமிட்டு, மறைமகள் தெரு, திருவள்ளுவர் மெயின்ரோடு வரை ஓடி நின்று விட்டது. சந்தேகபடும்படியான நபர்கள் யாரையும் அது மோப்பம் பிடிக்கவில்லை என்ற விபரத்தை அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் கு.வி.

குற்ற சம்பவங்களில், படியும், கை, கால்வாடை, இரத்தம், வியர்வை வாடை போன்றவற்றை வைத்து மோப்பநாய் கண்டுபிடிக்கும். அது போல் எந்த திசையில் குற்றவாளி ஓடினார் என்பதையும் மோப்பநாய்

கண்டுபிடித்துவிடும். குற்றம் நடந்த வீட்டில் இருப்பவர்கள், குற்ற சம்பவங்களில் ஈடுபட்டு இருந்தால், கண்டுபிடிக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. நான் சம்பவ இடம் சென்ற போது SS காலனி போலிசார் அங்கு இருந்தார்கள். கமிஷ்னர் போன்ற மற்ற உயர் அதிகாரிகளும் அங்கு இருந்தார்கள். நான் சம்பவ இடம் சென்ற போது, கைரேகை நிபுணர்கள் சோதித்துக்கொண்டிருந்தார்கள். சேரன் என்ற மோப்பநாய் பல வழக்குகளில் குற்றவாளியை கண்டுபிடித்து பரிசு வாங்கியுள்ளது என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கை பொறுத்தவரை மோப்பநாய் எதையும் அடையாளம் காட்டவோ கண்டுபிடிக்கவோ இல்லை. சம்பவ இடத்தில் எந்த வித கொலையும் நடக்கவில்லை என்பதால் தான் மோப்பநாயால் கண்டுபிடிக்கஇயலவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 15** |
| **Name** | : | திரு. தேனப்பன் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.06.2022**

## முதல் விசாரணை :

நான் புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் புதூரில் அழகு மெடிக்கல் ஸ்டோர்ஸ் என்ற பெயரில் மருந்துக்கடை வைத்துள்ளேன். மருந்துக்கடையை சுமார் 15 வருடங்கள் வைத்துள்ளேன். கை கிளொஸ் கேட்டார்கள். நான் கலை 08.00 மணிக்கு கடையைத் திறந்து, மதியம் 02.00 வரை கடையை நடத்துவேன். மாலை 04.00 மணிக்கு கடையைத் திறந்து 10.00 மணி வரை கடையை நடத்துவேன். கை கிளொஸ் யார் வாங்கினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னைக்கு என்று எனக்கு ஞாபகம் இல்லை. கடந்த 2015 ம் வருடம் வாங்கினார்கள். இரண்டு பேர் வந்து வாங்கினார்கள். அந்த கை கிளொஸ்க்கு தயாரிப்பு பெயர் கிடையாது. என்னிடம் காட்டப்படும் கைகிளொஸ் கசங்கிய நிலையில் இருப்பதால் இதுதானா என்று தெரியவில்லை. இருக்கலாம். கடை நடந்துவதற்கான வாடகை ஒப்பந்தம் போட்டுள்ளேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் கு.வி.

நான் B.Com படித்துள்ளேன். நான் பார்மசிஸ்ட் கிடையாது. பார்மசிஸ்ட்

பெயரில் தான் மருந்துக்கடை நடத்த முடியும். நான் பார்மசிஸ்ட் இல்லை என்பதால், நான் மருந்துக்கடை நடத்தவில்லை என்றாலும், போலிசார் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கடைக்கு TIN நம்பர் உள்ளதா என்றால் இருக்கிறது. தற்போது அந்த TIN நம்பர் ஞாபகம் இல்லை. அரசு உத்தரவுப்படி TIN நம்பர் வைத்துள்ளவர்கள், sales and service tax சட்டப்படி வாங்கும் பொருட்களுக்கு பில் போட்டுத்தான் விற்பனை செய்ய வேண்டும். என்னிடம் வாங்கிய கைகிளொஸ்க்கு நான் பில் போட்டு கொடுக்கவில்லை. எதிரிகள் யார் என்று எனக்கு தெரியாது என்றும், அவர்கள் என்னிடம் கிளொஸ் வாங்கவில்லை என்றும், அதனால் நான் பில் போட்டு தரவில்லை என்றால் சரியல்ல. எனது மருந்துக்கடையில் அரசு உத்தரவுப்படி, AC, CCTV கேமிரா இருக்க வேண்டும் என்றால் எனது கடையில் AC மட்டுமே உள்ளது. CCTV கேமிரா இல்லை. நான் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இப்படி எல்லாம் சொல்லவேண்டும் என்று போலிசார் தான் எனக்கு சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழககிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 16** |
| **Name** | : | திரு. சரவணன் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.06.2022**

**முதல் விசாரணை :**

நான் கடந்த 2015ம் ஆண்டு புதூர், SP ஆபிஸ் அருகில், கொடிகுளம் என்ற இடத்தில் மீனாட்சி பேன்சி ஸ்டோர் வைத்திருந்தேன். எங்கள் கடையில் லேடீஸ் சம்பந்தப்பட்ட தோடு, வளையல், பொட்டு போன்ற பெண்கள் சம்பந்தப்பட்ட பொருட்கள், காய்கறி பழங்கள் வெட்ட கத்தி ஆகியவை வைத்திருந்தேன். அருகில் மருத்துவமனை இருப்பதால் கத்தி கேட்பார்கள் அதற்காக கத்தியும் வைத்திருந்தேன். போலிசார் SI அவர்கள் ஒரு accused ஐ கூட்டிவந்தார்கள். கத்தி இங்க வாங்கினாரா என்று கேட்டார்கள். ஆமாம் என் கடையில் தான் வாங்கினார்கள் என்று சொன்னேன். என்னிடம் காட்டப்படும் கத்தி எனது கடையில் தான் வாங்கினார்களா என்று ஞாபகம் இல்லை. Accused யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு என்னை வரச்சொல்லி விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

போலிசார் தான் Accused ஐ கூட்டிவந்தார்கள். நான் விற்பனை செய்த கத்தி எந்த நிறுவனத்தின் தயாரிப்பு என்று தெரியாது. எனது கடைக்கு TIN number

உள்ளதா என்றால் இல்லை. TIN நம்பர் வைத்திருக்க வேண்டும். அரசு உத்தரவுப்படி ஒவ்வொரு பொருளுக்கும் பில் போடவேண்டும். என்னிடம் கத்தி வாங்கியதற்கு பில் போட்டு தரவில்லை. உண்மையில் என்னிடம் கத்தி வாங்கவில்லை என்றும் அதனால் தான் நான் பில் தரவில்லை என்றால் சரியல்ல. நான் விற்பனை செய்ததாக சொல்லும் கத்தி எவ்வளவு நீளம் இருக்கும் என்றால் சின்ன சைஸ் தான். சுமார் 100 செமீ இருக்குமா என்றால் தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை